Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 114 of 2024

DATE : 26.05.2025

Depositions of witness for Prosecution

PW : 6

| Name | டெனிசன் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | எஸ்.எஸ்.ராஜேந்திரன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of May 2025

**(எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் தற்போது கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிறுநீரகவியல் அறுவை சிகிச்சை பிரிவில் மேல் படிப்பு படித்து வருகிறேன். இதற்கு முன்பு விருதுநகர் தலைமை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வந்தேன். 23.12.2019ம் தேதி காலை 10.10 மணிக்கு நான் பணியில் இருந்த போது முத்துசாமி என்பரை முத்துசெல்வம் என்பவர் சிகிச்சைக்காக அழைத்துவந்தார். சிகிச்சைக்கு அழைத்து வந்த போது முத்துச்சாமி சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதனை செய்து பார்த்த போது அவருக்கு 2 செ.மீ. வலது கண் புருவத்திற்கு மேல் உள்ள நெற்றியில் தையல் இடப்பட்ட காயம் காணப்பட்டது. 2 செ.மீ. வலது காலில் தையல் இடப்பட்ட காயம் காணப்பட்டது. மேல் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவமனை எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மருத்துவர் மகேந்திர முரளி என்பவர் முத்துச்சாமிக்கு இடது கை மணிகட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது என்றும் அந்த காயத்திற்கு அவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கினார். அதன் அடிப்படையில் நான் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியது தான். **அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்த விபத்து பதிவேட்டின் அடிப்படையில் தான் நான் சிகிச்சை அளித்தேன் என்றால் சரிதான். வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் வலது பக்க நெற்றி, வலது கால் மற்றும் வலது கண் புருவத்தில் தான் காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். கை மற்றும் கம்பியால் அடித்தால் இது போன்று கொடுங்காயம் ஏற்பட வாய்புள்ளதா என்றால் வாய்புள்ளது. அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு எக்ஸ்ரே எதுவும் எடுத்தோமா என்றால் சிகிச்சை அளித்த மருத்துவர் சிடி ஸ்கேன் எடுத்திருப்பார். நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் காயத்தின் தன்மை குறித்து வலது கால் மற்றும் வலது கண் புருவத்திற்கு மேல் காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் இடது தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இல்லாத காயத்திற்கு நான் காயச்சான்று வழங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் யாருக்கோ வழங்கிய காயச்சான்றினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு